மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,

மாவட்ட நீதிமன்ற வளாகம், சேலம் 636 007.

அறிவிக்கை எண்: 07/2025 தேதி: 26.09.2025

சட்ட தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை அறிவிப்பு
(Selection of Para Legal Volunteers)

சேலம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் சேலம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் மேட்டூர், சங்ககிரி, ஓமலூர், ஆத்தூர், எடப்பாடி, வாழப்பாடி மற்றும் ஏற்காடு ஆகிய 7 வட்ட சட்டப்பணிகள் குழுக்களுக்கும், சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை பாமர மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக சட்ட தன்னார்வத் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.

சேலம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவிற்கும் மற்றும் சேலம் மாவட்டத்தில் இயங்கும் 7 வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கும் மொத்தம் **38** சட்ட தன்னார்வத் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட உள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தை சேர்ந்த சட்டப் தன்னார்வத் தொண்டர்களுக்கு கீழ்க்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றனர்,

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உள்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமகன்.
3. M.S.W.,பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்,
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள்
6. சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் வரை)
7. சமுக சேவை புரியும், சமூக ஆர்வலர்கள்(அரசியல் அமைப்பு சாராத தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள்)
8. மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள்

9. நீண்டகால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்.
10. மாவட்ட / வட்ட சட்டப் பணிகள் தன்னார்வ சட்டப் பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

மேற்கண்ட பிரிவினர்களில் சட்ட தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள், **https://districts.ecourts.gov.in/salem** என்ற சேலம் மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களின் நகல்களுடன் தபால் மூலமாக கீழக்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள்ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம், சேலம் 636 007.

மேலும் விண்ணப்பங்கள் வருகின்ற **10.10.2025** ஆம் தேதி மாலை **5.00** மணிக்குள் **இந்த அலுவலகத்தை வந்துசேரும்படி** விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. கால தாமதாமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விவரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விவரமும் **https://districts.ecourts.gov.in/salem** என்ற சேலம் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

குறிப்பு:

மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. மேற்படி பணியில் சேரும் நபர்களது பணியினை தன்னர்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது. மேலும் விவரங்களுக்கு சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்ட பணிகள் குழுக்களை அணுகலாம்.

ஒப்பம்/- xxxx

தலைவர் / மாவட்ட முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சேலம்.

அனுப்புனர்;

பெறுநர்:

தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள்ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம், சேலம்.

பொருள் : சட்ட தன்னார்வ தொண்டராக பணியாற்ற விண்ணப்பித்தல் தொடர்பாக.

அம்மா,

நான் சேலம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் சட்ட தன்னார்வ தொண்டராக பணியாற்ற விருப்பம் கொண்டுள்ளதால், எனது சுயவிவரம் மற்றும் உரிய சான்றாவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். நான் சட்ட தன்னார்வத் தொண்டராக தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவை மனப்பான்மையுடன் செயல்படுவேன் என உறுதியளிக்கிறேன். மேலும் விண்ணப்பதார்களுக்கான அறிவுரைகளை நான் நன்றாக படித்து அறிந்து கொண்டேன்.

இப்படிக்கு

விண்ணப்பதாரரின்கையொப்பம்.

நாள் :

இடம் :

இணைப்புகள்:

1.

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, சேலம்
சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்பபடிவம்.

சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்

1. பெயர் :
2. தந்தை/கணவர் பெயர் :
3. பாலினம் :ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர்
4. பிறந்ததேதி மற்றும் வயது **(சான்றிதழை இணைக்கவும்)** :
5. கல்வித் தகுதி **(சான்றிதழை இணைக்கவும்)** :
6. இனம் :
7. மதம் :
8. தாய்மொழி :
9. சாதி **(சான்றிதழை இணைக்கவும்)** :
10. முகவரி :

11. மின்னஞ்சல் முகவரி (Email address) :
12. தொலைபேசி எண் :
13. சமூக சேவையில் ஏதேனும் முன் அனுபவம்உள்ளதா? : ஆம்/ இல்லை
14. திருமண நிலை. :
15. தாங்கள் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருப்பின் அது பற்றிய விவரம் தெரிவிக்கவும் :

16. தாங்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (ஏதேனும் இரண்டு மட்டும் தேர்வு செய்யவும்)

1. சேலம் : ☐
2. மேட்டூர் : ☐
3. ஓமலூர் : ☐
4. ஆத்தூர் : ☐
5. சங்ககிரி : ☐
6. வாழப்பாடி: ☐
7. எடப்பாடி : ☐
8. ஏற்காடு : ☐

17. **<u>கீழ்க்கண்ட எந்த பிரிவின்கீழ் விண்ணப்பிக்கிறீர்கள்</u>**:
(**அதற்கான சான்றிதழை இணைக்கவும்**)

வ.எண்	பிரிவுகள்	விண்ணப்பிக்கும் பிரிவு
1.	ஆசிரியர்கள் (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உட்பட)	
2.	ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்	
3.	மூத்த குடிமக்கள்	
4.	சமூக பணியில் முதுநிலை கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள். (MSW Students & Teachers)	
5.	அங்கன்வாடி பணியாளர்கள்	
6.	மருத்துவர்கள் உடல்நல நிபுணர்கள் மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள்	
7.	அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள்	
8.	மகளிர் குழுக்கள்	
9.	நீண்டகால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்.	

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் :
இடம் :

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, சேலம்

சட்ட தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம்,மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.

2. மேற்படி பணியில் சேரும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும்.**நிரந்தர பணியென கருத இயலாது**.

3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை சேலம் மாவட்ட நீதிமன்ற **https://districts.ecourts.gov.in/salem** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களின் நகல்களுடன் **10.10.2025**-ஆம் தேதி மாலை **5.00** மணிக்குள் **விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தை வந்து சேரும்படி**, தபால் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. **விண்ணப்பிக்க வேண்டி முகவரி**

தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப் பணிகள்ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம், சேலம்.

5. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

1	பிறந்த தேதி & வயதுக்கான சான்று	பிறப்பு சான்றிதல் /SSLC/HSC சான்றிதழ்
2	ஜாதி சான்று	தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதி சான்று
3	கல்வித் தகுதி	S.S.L.C / HSC / Degree / Diploma சான்றிதழ்
4	நிரந்தர முகவரிக்கான சான்று	குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை/ ஆதார் அட்டை/ பாஸ்போர்ட்

6. மேலும் விவரங்களுக்கு சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்ட பணிகள் குழுக்களை அணுகலாம் (அ) **https://districts.ecourts.gov.in/salem** என்ற சேலம் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்.

ஒப்பம்/- xxxx
தலைவர் / மாவட்ட முதன்மை நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சேலம்.